கைத்தறி

ஆசிரியர்: எம் கே. சாமி.

மாதப் பத்திரிகை　　　　விலை அணா இரண்டு

தறி 2	கோவை, 15—9—1951	பாவு 11

கண்ணைக் கவரும்
எண்ணற்ற
கைத்தறி ஜவுளி ரகங்கள்
மொத்தமாகவும் சில்லரை
யாகவும் கிடைக்குமிடம்;
காமதேனு டெக்ஸ்டைல்ஸ்
ஈஸ்வரன் கோவில் தெரு—ஈரோடு.

CONNEMARA PUBLIC ... MAY ... MADRA

குடிசைத் தொழிலுக்கு தனி இலாகா!

சென்னை சர்க்காரின் பத்திரிகைக் குறிப்பு ஒன்று, குடிசைத் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்க தனி இலாக ஒன்று அமைப்பது சம்பந்தமாக சமீபத்தில் வெளியாகி இருந்தது.

இம்மாகாண கைத்தறி நெசவாளர்களின் நீண்ட நெடுநாளைய கோரிக்கைகளில் ஒன்றான, தனி இலாகா அமைத்து நெசவுத்தொழிலைப் பாதுகாக்கவேண்டுமென்பது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக எண்ணி அக்குறிப்பை சந்தோஷத்தோடு நாம் பார்த்தோம்.

நாம் எண்ணியதற்குப் புறம்பாகவே சர்க்காரின் பத்திரிகைக் குறிப்பு இருந்தது. இனிமேலும் வழக்கம் போல் கைத்தறி நெசவுத்தொழில்பற்றிய விஷயங்கள் அபிவிருத்தி இலாகாவிடமே இருக்குமென்றும், இதர குடிசைத் தொழில்களுக்கு மட்டுமே அமைக்கப்படப் போகும் புது இலாகா பணியாற்றுமென்றும் அக் குறிப்பு பறைசாற்றுகிறது.

இதர குடிசைத்தொழில்களைப் பாதுகாக்கத் தனி இலாகா அவசியமே என்பதில் அபிப்ராய பேதம் நம்மிடம் இல்லை. ஆனால், நாட்டின் தொன்மைமிக்கதும், கிராமியப் பொருளாதார—சமூக வாழ்வில் முதுகெலும்புபோன்ற ழிலுக்கு மட்டும் தனி இலாகாவின் மேற்பார்வையோ, கண்காணிப்போ அவசியமில்லையென்ற முடிவுக்கு சர்க்கார் வந்துள்ளதைத்தான் நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை; வன்மையாக ஆட்சேபிக்கவும் செய்கிறோம்.

ராஜ்யத்தில்உள்ள நெசவாளர் ஸ்தாபனங்கள் மட்டுமின்றி; சர்க்காரால் அமைக்கப்பட்டுள்ள ராஜ்ய கைத்தறிக் கமிட்டி கூட, கைத்தறி நெசவுத் தொழில் வளர—பாதுகாக்கப்பட தனியான இலாகா ஒன்று அமைக்கப்பட வேண்டுவது அவசியம் தான் என்ற முடிவுக்குத்தான் வந்துள்ளது.

சுமார் 9 லட்சம் தறிகளும், அதை ஒட்டிய பல்வேறு உப தொழில்களும், அவைகளை நம்பி நிற்கும் 75 லட்சம் மக்களும் வாழ்க்கையில்—தொழிலில் மாற்றம்காண வேண்டுமெனில் ஓர் தனிஇலாகா அவசியமேயென்பதில் அபிப்ராய வேறுபாடுஇருக்க நியாயமில்லை.

லாம். இக்கேள்வி நியாயமானதும் கூட.

ஆனால், இக்கேள்விக்குப் பின்னால் நிற்கிற அனுபவக்குறைவை மட்டும் நாம் அம்பலத்திற்கிழுக்காமலிருக்க முடியாது. அட்வைசரி சர்க்கார் இருந்த காலத்தில், டெக்ஸ்டைல் இலாகா என்ற ஒன்றை கைத்தறிப் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க ஏற்படுத்தப்பட்டது. அதற்கு இருந்த அதிகார உதவியால இந்த ராஜ்ய நெசவாளர்களுக்கு —அவர்களின் தொழிலுக்கு ஒரு நிச்சயமான அளவு நூல் மாதாமாதம் கிடைத்துவந்தது. எந்த நெசவாளியும் தொழில் இன்றிப் பட்டினியால் மடியவில்லை.

நூல் உற்பத்தியாளர்களான மில் முதலாளிகளைக் கட்டுப்படுத்தவும், உற்பத்தியின் மீது கண் காணிக்கவும் அன்று அந்த இலாகாவால் முடிந்தது. மில் முதலாளிகளும் இன்றைக்கு உள்ளது போல் அன்று ஒத்துழையாமையெல்லாம் அனுஷ்டிக்க முடியவில்லை. சுருக்கமாகச் சொல்வதெனில் பெட்டிப்பாம்பு போல் டெக்ஸ்டைல் இலாகாவின் முன் மில் முதலாளிகள் இருந்தனர்.

நெசவுத்தொழிலுக்கு மட்டுமில்லையாம்?

அபிவிருத்திஇலாகா கைத்தறி நெசவுத் தொழிலைப்பற்றிக் கவனித்துக்கொள்வது தனி இலாகா

அந்த இலாகா எடுக்கப்பட்டு, இன்று அபிவிருத்தி இலாகாவிடம் கைத்தறி நெசவுத் தொழில்

டுள்ள நிலைமையென்ன? போதுமான நூல்கொடுக்க அவ்விலாகாவால் கையாலாகவில்லை. நெசவாளர்களைப் பட்டினியிலிருந்து—பிச்சையெடுப்பதிலிருந்து—தொத்து நோய்களிலிருந்து—பட்டினிச் சாவுகளிலிருந்து தடுக்க முடியவில்லை.

அதற்குப்பதில், நீண்ட அறிக்கைகள் விடுவதிலும், அனுபவசாத்தியமற்ற ஆடம்பரமான ஆலோசனைகளை—மில் முதலாளிகளுக்கல்ல—பட்டினியால்வாடும் நெசவாளர்களைப் பார்த்துக் கூறும் கலையிலும் தான் இன்று அபிவிருத்தி இலாகா தேர்ச்சி பெற்றுள்ளது!

மில்களின் உற்பத்தியின் மீது இவ்விலாகாவால் அதிகாரம் செலுத்த முடியாது. அவர்களுக்கு வேண்டுகோள்கள் மட்டும் விடலாம்.

இந்த சாரமற்ற இலாகாவினிடமேயே இம்மாகாண கைத்தறி நெசவுத் தொழில் மீண்டும் மேற்பார்வையில் விடப்படுமானால், வெகு விரைவில் நிச்சயமாக அழிந்தே போகும் என்பதற்கு எவரிடமும் போய் ஜோதிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுவதில்லை. ஏனெனில்; அவ்விலாகாவின் நடைமுறைத் திட்டங்கள் இந்த ராஜ்ய நெசவாளர்களை எங்கு கொண்டு போய் விட்டிருக்கிறது என்பது ஒன்றே அதற்குப் போதுமான அத்தாட்சியாக இருந்து வருகிறது.

குறிப்பாக மூன்று மாதங்களுக்கு முன், நூலின்றி கஷ்டப்படும் நெசவாளர்களைக் கொண்டு, அவர்கள் மத்தியில் நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தவிர்க்க, கதர் நூல் நூற்கும் வேலையில் ஈடுபடுத்தப்போவதாக அவ்விலாகா அறிவித்தது.

நெசவாளர்களை, கல்லைவெட்டவும், மண் சுமக்கவும், விறகு தூக்கவும் போகச்சொன்ன இவர்கள், பஞ்சையும் ராட்டையையும் கொடுத்து நூல் நூற்கவாவது சொல்கிறார்களே ஏதோ நல்ல காலம் போலிருக்கிறது என்று எண்ணி அந்தத் திட்டத்தை எப்படி அமல் நடத்தப் போகிறீர்கள் எனக் கேட்டு நாம் எழுதினோம்.

சரியாக ஒரு மாதம் கழித்து நமதுகேள்விகளுக்கு, "கூட்டுறவு ரிஜிஸ்ட்டாரிடமிருந்து விளக்கம் வரும்" என்ற பதில் நமக்குவந்தது. இதைநாம் ஏன் இங்குஎடுத்துக் காட்டுகிறோமெனில், கதர் நூல் நூற்பதிலும், அதைநெய்வதிலும் நெசவாளர்களை ஈடுபடுத்தப் போவதாக அறிவிக்கும் இலாகாவிடமே அதைப்பற்றிய தெளிவு—திட்டம் இல்லையென்பதை வெளிப்படுத்தவும், இந்த பதிலும் காலம்கடத்தியே அனுப்பும் திறமையற்ற ஏற்பாட்டையும் உடையதுதான் இந்த அபிவிருத்தி இலாகா என்பதை வாசகர்களும் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதற்காகவேதான் நாம் இதைப் பிரஸ்தாபித்தோம்.

இது போன்று நூற்றுக்கணக்கான சம்பவங்களை நாம் மேற்கோள்களாக காட்ட முடியும். இந்த இலாகாவினால் கைத்தறி நெசவுத் தொழில் பாதுகாக்கப்படஇயலாது. அதற்கான தெளிவோ, திட்டமோ, அதிகாரங்களோ இல்லாத ஓர் பொம்மை இலாகாதான் இது என்று திட்டமாகவே சொல்லலாம்.

மேலும் பாருங்கள்! அதனுடைய நூல் வினியோகத் திட்டத்திற்கும், கடந்த காலத்தில் டெக்ஸ்டைல் இலாகா அமுல் நடத்திய நூல் வினியோகத் திட்டத்திற்கும்—மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்யாசமிருப்பதை. தொடர்ந்து கவனித்து வருபவர்களுக்கு இது நன்கு தெரியும்.

அதனால் தான் அபிவிருத்தி இலாகாவும் கைத்தறி நெசவுத் தொழில் சம்பந்தப்பட்டவரை தனி இலாகாதானே? என்ற கேள்விக்குப் பின்னால் சரித்திர உண்மையில்லையெனக்கூறினோம்.

வரப் போகும் தேர்தலில் பெரும் பணக்காரர்கள்தான் சட்டசபைகளை அலங்கரிப்பார்கள். இவர்கள் இயற்கையாகவே மில் முதலாளிகளின் லாப நலனுக்கு ஆதரவாகத் தானிருப்பார்கள். கைத்தறி நெசவாளியைப் பற்றியோ, அல்லது அவனது தொழிலைப்பற்றியோ அக்கறை காட்டுபவர்கள் அச்சபைகளில் இருப்பதே துர்லபம்.

நெசவாளியின் குரல் சட்டசபைகளில் கேட்கும்படியாக தொகுதி நிர்ணயங்களோ, அரசியலமைப்போ வகுக்கப்படவில்லை. எனவே, இதர குடிசைத்தொழில்களின் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் எப்படி ஓர் தனிஇலாகா அவசியமோ, அதே போல இந் நாட்டின் தொன்மைமிக்க குடிசைத் தொழிலான கைத்தறி நெசவுத் தொழிலுக்கும் அதிகாரம் நிறைந்த—தனியான டெக்ஸ்டைல் இலாகா ஒன்று இருக்க வேண்டுவது அவசர அவசியமாகும்.

இக்கோரிக்கை பன்னெடும் நாட்களாக வற்புறுத்தப்பட்டும், இன்னும் பயனளிக்காமல் போனதற்குக் காரணம் எவ்வளவோ! எது எப்படி இருப்பினும் கைத்தறி நெசவுத் தொழில் பாதுகாக்கப்பட—நவீன இயந்திர சாதனங்களோடு இணைந்து வளர—நிச்சயமான எதிர்காலமும்—ஸ்திரமான நிலையும்பெற அவசியம் தனியான இலாகா அமைக்கப்பட வேண்டுமென்பதை நாம் எடுத்துக் காட்டுகிறோம்.

இதை மாகாண நெசவாளர்கள், தங்களின் வாழ்க்கைப்பிரச்னைகளில் ஒன்றாகக் கருதி நெசவாளருக்கு—நெசவுத் தொழிலுக்குத் தனி இலாகா ஒன்று விரைவில் அமைக்கப்பட வேண்டுமென்று சர்க்காரை வற்புறுத்துவதே சிறந்தது என எடுத்துக் காட்டுகிறோம். —'கிருமி'

கலர் நூல் ஒதுக்குவதிலுமா

ப்ாரபட்சம் காட்ட வேண்டும்?

நமது மாகாணத்திற்கு அ.இ. வினியோகத் திட்டத்தின்படி ஒதுக்கப்படும் நூல் பேல்களில், மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் உள்ள சாயச்சாலை கன்சியூமர் கோட்டாதாரர்களுக்கு மாதா மாதம் 646 பேல்கள் கோட்டாவாக ஒதுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நூலைப்பெற்று அவர்கள் சாயம் துவைத்து, தங்களின் வாடிக்கைதாரர்களான நூல்வியாபாரிகளுக்கு முன்பு வினியோகித்து வந்தார்கள். அவ்வினியோக முறை நேர்மையான அடிப்படையில் இல்லாததாலும், மறைமுகமாக அவர்கள் கொள்ளை லாபம் சம்பாதிக்க ஏதுவாக இருப்பதாலும் அம்முறையை மாகாணத்திலுள்ள நெசவாளர் ஸ்தாபனங்கள்வன்மையாக ஆட்சேபித்தன.

நூல் நெருக்கடிமிகுந்துள்ள இக் காலத்தில் சாயச்சாலைக்காரர்களுக்கு ஒதுக்கப்படும் நூலும், நேர்மையான முறையில், நியாயமான விலையில் தறிகாரர்களுக்கு வினியோகிக்கப்படவேண்டுமென நாமும் கட்டுப்பாடு பொருள்கள் டைரக்டரிடமும், சம்பந்தப்பட்ட ஜில்லா அதிகாரிகளுடனும் நேரிடையாகப் பேச்சுவார்த்தைகள் மூலம் வற்புறுத்தினோம். "கைத்தறி"யிலும் அதுபற்றிய செய்திகளும், கட்டுரைகளும் இடம் பெற்றன.

அதன் பிறகுதான் சாய நூல், எந்தெந்த ஜில்லாக்களுக்குத் தேவையென்பதை ஆராய்ந்து அப்பிரதேசங்களில் நீண்ட நாட்களாகவே சாய நூல்வாங்கிவந்து வர்த்தகம்செய்துவந்த வியாபாரிகளுக்கு வெள்ளை நூலை அலாட்மெண்ட் போடுவதைப்போலவே, சாய நூலையும் அலாட்மெண்ட் போட சமீப மாதங்களாக ஆரம்பித்துள்ளார்கள்.

இந்த ஏற்பாட்டின்மூலம் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் கணக்கில் வராது கள்ளத்தனமாக மறைந்து விடுவதைத் தடுக்கப்பட்டிருக்கிறது என்பதை விளக்கிச் சொல்ல வேண்டுமென்ற அவசியமில்லை. மொத்தத்தில் மதுரை சாயச்சாலைக் கன்சியூமர்களின் தில்லுமுல்லுகள் தடுக்கப்பட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குறிய செய்தியே.

சாய நூல் அலாட்மெண்ட் திட்டத்திற்குள் வந்து சுமார் நான்கு மாதங்களாகின்றன. இருந்தும் கோவைஜில்லாமட்டும் கலர் நூல் பெறும் ஜாபிதாவில் எப்படியோ விடுபட்டுப்போயிருந்தது. இதுபற்றி கோவை ஜில்லா டெக்ஸ்டைல் கண்ட்ரோல் அதிகாரியைநாம்அணுகிகோவை ஜில்லாவிற்கும் கலர் நூல் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென வற்புறுத்தினோம். அவரும் நம் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, "நமது ஜில்லாவிற்கும் கலர் நூல் வரும்படி யேற்பாடு செய்கிறேன்" என அவர் வாக்குறுதியளித்தார். அதன்படி ஆகஸ்ட் மாதம் முதல் கோவை ஜில்லாவிற்கும் கலர் நூல் வர ஆரம்பித்துள்ளது.

வந்த நூல், கலர் நூல்வர்த்தகர்கள் எல்லோருக்கும் சமமான அளவில் ஒதுக்கப்படவில்லை. அததகுப் பதில் கீழ்க் கண்ட முறையில் ஏற்றத் தாழ்வு காட்டப்பட்டுஇருக்கிறது.

பொள்ளாச்சியில் உள்ள ஒரு நூல் வியாபாரிக்கு ¼ பேல்தான் கலர் நூல் அலாட்மெண்ட் போடப்பட்டிருக்கிறது! அதே காலத்தில் உடுமலைப்பேட்டையிலுள்ள ஒரு நூல் வியாபாரிக்கு 7¼ பேல் நூல் அலாட்மெண்ட் போடப்பட்டிருக்கிறது!

28 மடங்கு வித்யாசம் காட்டப்பட்டுள்ள இந்த அலாட்மெண்ட் கோளாறுக்குக் காரணம் என்ன என்பதைப் பற்றிப் பலரும் பலவிதமாக அபிப்ராயம் கூறுகிறார்கள். வெள்ளையப்பனின் கைங்கரியம் நடந்துள்ளதாகக் கூறுவோர் பலர்.

கோபிசெட்டிபாளையம் நெசவாளர்

கூட்டுறவு சங்கம் லிமிடெட் No. K. 1171

கச்சேரி வீதி, கோபிசெட்டிபாளையம் P. O.

திடமான நெசவு! **தேட்டான ரகங்கள்!!**

நாங்கள் 20 நே. முதல் 40 நே. வரை நூலில்

கலர் ஷர்ட்டிங், வெள்ளை, காரிக்கன் காடா பீசுகளும், வேஷ்டி, துண்டு மடிகளும்

போற்றத்தக்க முறையில் புத்தம் புது மோஸ்தர்களில் தயார் செய்து வருகிறோம்.

ஏற்றுமதியாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் விசேஷ சலுகைகள் உண்டு.

தேவைக்கு எழுதுங்கள்.

K. S. முத்துக்குமார்,

தலைவர்

"கைத்தறி" தீபாவளி மலர்!

"கைத்தறி" அடுத்த பாதஇதழ் நாம் ஏற்கனவே அறிவித்துள்ளது போல இரண்டாவது ஆண்டு மலராகவும், தீபாவளி மலராகவும் அழகிய தோற்றத்தோடும், பல புதிய அம்சங்களோடும் வெளிவரப் போகிறது.

நெல்லை வி. எஸ். சங்ரசுப்ரமணிய முதலியார், காஞ்சீபுரம் கே. எஸ். பார்த்தசாரதி, திருச்செங்கோடு டி. எஸ். பட்டாபிராமன், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஏ. கே. ஞானியார், சேலம் கே. பி. இ. சிவராமன், முதலியோரின் தொழில் துறை ஆராய்ச்சிக் கட்டுரைகளும்,

புதுமைக்கவிஞர்கள் கே. சி. எஸ். அருணாசலம், இரா. அவையழகன், "முசோலினி" ஆகியோரின் புரட்சிச் கருத்துக்கள் கோண்ட இனிய கவிதைகளும், அ. சீனிவாசன், 'ஆர். எம். கே' முதலிய முற்போக்கு சிந்தனையாளர்களின் கருத்து நிறைந்த சிறு கதைகளும் இடம் பெறுகின்றன.

மேலும், தமிழ் நாட்டு வாசகர்களுக்கு, சுவை மிக்க தங்கள் எழுத்துக்களின் மூலம் அறிமுகமாகியுள்ள முற்போக்கு எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரின் கவிதை, கட்டுரைகளும் இடம் பெறுகின்றன.

மலரின் விலை 6 அணா தான்! நமது ஏஜண்டுகளிடம் முன் கூட்டியே உங்கள் பிரதிக்கு பதிவு செய்து கொள்ளுங்கள். சந்தாதாரர்களுக்கு வழக்கம் போல் பிரதிகளனுப்பப்படும்.

$7\frac{1}{4}$ பேல் அலாட்மெண்ட் பெற்றவர் ஒரு ஆகஸ்ட் தியாகிபாக்கும் சார் என்று தன்னடக்கமாக நமது ஆபீசுக்குவந்து சொல்லிப் போகும் நூல்வியாபாரிகள் பலர்.

இந்தத் தகவல்கள் எல்லாம் உண்மையாகவும் இருக்கலாம்; அல்லது இல்லாமலுமிருக்கலாம். அதைப்பற்றிக் கவலையுமில்லை. ஆனால், கலர் நூல் அலாட்மெண்டில் காட்டப்பட்டுள்ள பாரபட்சம் என்னவோ உண்மைதான் என்பதற்குப் போதிய சான்று நம்மிடம் இல்லாமலில்லை.

பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்த போது, முன்பு வியாபாரிகள் கலர் நூல் பெற்று வியாபாரம் செய்து வந்த கணக்கை—"டர்னோவரை" அடிப்படையாகக் கொண்டே இப்போது அவர்களுக்கு நூல் ஒதுக்கப்பட்டு இருக்கிறதென கூறப்படுகிறது. இது பற்றி 7—9—51ந் தேதியன்று புதிதாக வந்துள்ள கோவை டி. சி. ஓ. வைக் கண்டு கேட்ட போது "கலர் நூலை வர்த்தகர்களுக்கு நாங்கள் ஒதுக்குவதில்லை; மதுரை சாயச்சாலைக்காரர்களே தான் ஒதுக்குகிறார்கள்." எனக் கூறினர். இக்காரணங்கள் அர்த்தமற்றதும், இன்பார்மல் நூல் பங்கீடு திட்டத்திற்கு முரணானதுமாகும் என்றே நாம் கருதுகிறோம்.

தவிர, சாயச்சாலைகாரர்களிடம் கலர் நூல் வியாபாரிகளை இணைத்து (லிங்கிங்) விடுவதில் வேறு சூது நடந்திருப்பதாகப் புகார்கள் சொல்லப்படுகிறது. இம்மாதிரி முறை தவறியநிகழ்ச்சிகள் எல்லாம் ஏன் நடைபெறுகின்றன என்பது நிரூபிக்கமுடியாத அந்தரங்க ரகசியங்களாகவே போய்விடுகின்றன. இதன் காரணமாக நெசவாளர்கள் திருப்தியற்ற—சாய உத்திரவாதமில்லாத நூலைத்தான் பெற வேண்டியிருக்கிறது.

இத்தனை கோளாறுகளையும் நாம்கடந்த 23-8-51ந்தேதிசென்னையில் கட்டுப்பாடு பொருள்கள் டைரக்டரைக் கண்டு எடுத்துச் சொன்னோம். அவரும் விசாரித்துதக்கதுசெய்வாதக வாக்களித்துத்தானிருக்கிறார்.

என்றாலும் இந்தப் பிரச்சனையைப் பரிகரிக்க நாம் கீழ்காணும் ஆலோசனைகளை நெசவாளர்கள் சார்பில் முன் வைக்க வேண்டிய கடமை யுணர்வோடு சமர்ப்பிக்கிறோம்.

1) கலர் நூல் அலாட்மெண்டில் வியாபாரிகளுக்கிடையே பாகுபாடின்றி சமமாக அலாட்மெண்ட் போட வேண்டும். முன்னைய "டர்னோவரை" கணக்கில் கொள்ளக்கூடாது.

2) மதுரை சாயச்சாலைக் கன்சியூமர்களிடம் கலர் நூல் சில்லரைவிற்பனையாளர்களை இணைப்பதை விடுத்து, அவ்வப்போது அலாட்மெண்ட்போட வேண்டும். அல்லது சாரதி, ரசாயனச் சாயச்சாலை நூல்கள், எல்லா வர்த்தகர்களுக்கும் மாறி மாறி அலாட்மெண்ட் கிடைக்கும்படிஏற்பாடு செய்ய வேண்டும்.

3) எந்த நெ. நூல் மதுரை சாயச்சாலைகளில் இருக்கிறதோ அந்த நெ. நூல் எந்தப் பகுதிக்குத் தேவையாக இருக்கிறதோ, அந்தக்கணக்கையும் ஸ்தலதேவையையும் மனதில் கொண்டு "கலர் நூல் அலாட்மெண்ட்போடப்பட வேண்டும்.

4) சாயநூல் தறிகாரர்களுக்கு குறைந்தபட்சம் 10 ராத்தல் வீதமாவது கூப்பன்களுக்கு சப்ளை செய்யப்படவேண்டும்.

(10-ம் பக்கம் பார்க்க)

கூட்டுறவு சங்கம் அமைத்துத் தருமாறு ஊமையம்பட்டி நெசவாளர்களின் வேண்டுகோள்.

ஊமையம்பட்டி செ. ஆறுமுகம் அவர்கள் இல்லத்தில்மேற்படியூர் சங்கத் தலைவர் ந. லட்சுமணமுதலியார் தலைமையில் கூடி கீழ்க்கண்ட விஷயங்கள் பற்றி முடிவு செய்யப்பட்டன:—

1) எங்கள் கிராமத்தில் சுமார் 400 நெசவாளர்கள் இருக்கின்றனர். இவர்களுக்கு தறியொன்றுக்கு ½ கட்டு விதம் நூல், சப்ளை செய்து இரண்டு மாதமாகிறது. இதனால் நெசவுத் தொழிலாளர்கள் வேலையின்றி பஞ்சத்தாலும், பட்டினியாலும் வாடிச் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு; ஆளாகியுள்ளனர். ஆகையால் எங்கள் கிராமத்திற்கு உடனடியாக ஒருகட்டு வீதமாயினும் நூல் சப்ளை செய்ய வேண்டுமாய் சென்னை சர்க்காரையும், ஜில்லாக்கலெக்டர் அவர்களையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

2) கைத்தறித் துணிக்கு வெளி நாடுகளில் நிரந்தரமாக நல்ல மார்க்கட் ஏற்படுத்தி, நல்ல கிராக்கியும், தகுந்தபாதுகாப்பும் உண்டாக்கிக் கொடுக்க வேண்டுமாய் மத்திய சர்க்காரையும், மாகாண சர்க்காரையும் கேட்டுக்கொள்ளுகிறது.

3) எங்கள் ஊரில் உள்ள 400 தறிகளைக் கொண்டு கூட்டுறவு சொஸைட்டி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமாய் மாகாண ரிஜிஸ்ட்டார் அவர்களைக் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சொஸைட்டியில் மெம்பர்களாக சேருவதற்கு பணவசதியில்லாததால் கூட்டுறவு சொஸைட்டியில் சேரும் ஒவ்வொரு நெசவாளர்களுக்கும் வட்டியில்லாக் கடனாக ரூபாய் ஐம்பது கொடுக்கவேண்டுமாய் சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது. காரியதரிசி மாணிக்கம் வந்தனோபசாரம் கூறியபின் கூட்டம் கலைந்தது.

1947-ம் ஆண்டிற்குப் பின்னால் ஏற்பட்ட உண்மைத் தறிகளுக்கும் நூல் கொடுக்குமாறு கோவை டி. சி. ஓ. வின் உத்தரவு!

பழைய தறி புதுத் தறி என்ற பாகுபாடின்றி 1947-ம் வருடத்திற்குப்பின் ஏற்பட்ட தறிகளுக்கும் அவைகள் உண்மையானவையாக இருந்தால் நூல் கொடுக்குமாறு கோவை டி. சி. ஓ. உத்திரவிட்டுள்ளார் என, அவரை 11-9-51-ந் தேதி பேட்டி கண்ட த. நா. கை. நெ. தொ, சம்மேளன பவானிக் கிளையைச் சேர்ந்த என். பெரியசாமியும், சுப்ரமணியமும் அறிவிக்கின்றனர்.

சீரான நூல் வினியோகத்திற்கு சேலத்தில் முன் ஒத்திகை!

சென்ற மூன்று மாதங்களுக்குப் பிறகு, இவ்விடம் 80 நெ. நூல் கார்டிற்கு 2/26 நெ. நூல் 1 லடி, 60 நெம்பரில் 2 ராத்தல், 80 நெம்பரில் 2 ராத்தல் போட்டிருக்கிறார்கள்.

2/26 நெ. நூலை 80 நெ. நூல் கார்டிற்கு அலாட்மெண்ட் போட்டுள்ள விந்தையை என்ன என்பது? எங்களுக்குத் தேவையில்லாத இந்த 2/26 நெ. நூலை வாங்கினால்தான் 60, 80, நெ. நூல்கள் கொடுக்கமுடியுமென்று சொல்கிறார்கள்.

60 நெ. நூல் கண்ட்ரோல் விலையைவிட அதன் கள்ள மார்க்கெட் விலை குறைந்து போயுள்ளது. நெசவாளி வேண்டாத 2/26 நெ. நூலை வாங்கி லடிக்கு ரூ. 1—4—0 தள்ளி விற்க வேண்டியிருக்கிறது. 60 நெ. 80 நெ. நூல் 2 ராத்தலுக்காக 2/26, 60 நெ. நூல்களை **கட்டாயம் வாங்கி** நெசவாளி நஷ்டப்பட வேண்டியேற்படுகிறது.

சீரான நூல் சப்ளை ஏற்படுவதற்குள், இந்த நூல் கண்ட்ரோலினால் இன்னும் நெசவாளர்கள் எவ்வளவு துன்பங்களை அனுபவிக்க வேண்டி வருமோ?

இப்படிக்கு,
"சேலம் நகர நெசவாளி"

ஸ்ரீவில்லிப்புத்தூர் கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் லிமிடெட்,

***No. A. 1601.*, ஸ்ரீவில்லிப்புத்தூர்.**

பல லட்சக்கணக்கான பாட்டாளிகளை உய்வித்து வரும் பழந்தொழில் கைத்தறி நெசவு. மக்களின் ஆதரவே அதை வளர்க்கும் சாதனம். மக்களின் நலனே குறிக்கோளாகக் கொண்டு உழைப்பவை கூட்டுறவு சங்கங்கள். அதன் அடிப்படையில் எங்கள் சங்கம் ஆரம்பித்த காலந்தொட்டு மக்களின் தேவைக்கான **வேட்டி, துண்டு, இன்னும் வெள்ளை பீசுகள்** ஏராளமாகத்தயாரித்து **நியாயமான விலையில் வினியோகிக்கிறோம். தேவைக்கு எழுதுங்கள்.**

A. K. ஞானியார், செயலாளர். **P. குருசாமி**, தலைவர்.

29 MAY 1955 MADRAS

"கைத்தறி"

கோவை, 15—9—51.

ஹை கோர்ட் தீர்ப்பு!

சென்னை உயர்நீதி மன்றத்திலே, கோவையைச் சேர்ந்த விசைத்தறி பாக்டரி சொந்தக்காரர் ஒருவர், சர்க்காரின் பாரபட்சமான நூல் ஒதுக்கும் கொள்கைக்கு எதிராக வழக்கு ஒன்று தொடுத்திருந்தார். வழக்கை விசாரித்த நீதிபதிகள் யதேச்சாதிகாரம் நிறைந்த—ஒரு தலைப்பட்சமான இன்றைய நூல் வினியோகமுறையை சர்க்கார் மாற்றிக் கொள்ள வேண்டுமென்றும், பொதுக் கொள்கையொன்று வகுத்து அதன்படி எல்லோருக்கும் சம நீதி வழங்க மத்திய சர்க்கார் முன் வருவதுதான் நல்லதென்றும் அபிப்ராயம் தெரிவித்துள்ளனர்.

அரசியல் சட்டத்தின் 19-வது விதிப்படி, மக்களுக்கு உத்திரவாதம் செய்யப்பட்டுள்ள மூலாதார உரிமைகளை; ஜவுளிக் கமிஷனரின் 12 (4)வது ஷரத்து வழங்க மறுப்பதாகவும், இந்த ஷரத்து ஒரு குறிப்பிட்ட சிறிது காலத்திற்கே இருந்தாலொழிய அது செல்லத் தக்கதல்ல வென்றும் நீதிபதிகள் கூறியிருக்கிறார்கள்.

தெளிவாகச் சொல்வதனில் தொழிலில் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டுமென்பதே நீதிபதிகளின் தீர்ப்பின் சாரமாகும்.

இரண்டாவதாக, ஜவுளிக்கமிஷனரின் 30-வது ஷரத்துப்பற்றியது. இதன் மீது வழக்குத் தொடர்ந்தவர், நெசவாலைகளில் உள்ள விசைத் தறிகளுக்கு 300-லிருந்து 400 ராத்தல் வரை நூல் கொடுக்கப்படுவதும், தனது தொழிற்சாலையிலுள்ள விசைத்தறிகளுக்கு அதிலும் குறைவான நூலே கொடுக்கப்படுவதாகவும், இதுவும் பாரபட்சமானதேயென்றும், ஆகவே தனது தொழிற்சாலைக்கும், நெசவாலைகளுக்கு ஒதுக்கப்படும் நூலின் அளவே ஒதுக்கப்பட வேண்டுமென்றும் வாதித்தார்.

இதுபற்றி நீதிபதிகள் அளித்துள்ள தீர்ப்பு, டெக்ஸ்டைல் இலாகாவின் ஒருதலைப் பட்சமான—மானங்கெட்ட செயல்களை—உத்திரவுகளை அம்பலத்திற்கு இழுத்துள்ளது. 30-வது ஷரத்தை அவர்கள் பூராவாக செல்லத்தக்கதல்ல என்று சொல்ல இஷ்டப்படவில்லை. அப்படிச் சொன்னால் "ஜவுளி கண்ட்ரோல் திட்டமே புகைந்து போய் அழிந்துவிடும்" என்று நீதிபதிகளே கூறியுள்ளனர்.

நீதிபதிகளின், பொன்னான தீர்ப்பின் சில வாசகங்களை நமது நேயர்களுக்கு இங்கு கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். இதுவொன்றே போதும் ஊழல் நிறைந்த டெக்ஸ்டைல் இலாகாவின் போக்கியதை வெளிப்பட.

"இத்தகைய கட்டுத் திட்டங்களுக்கு மீறிய, அளவு கடந்த இஷ்டம் ஒரு நியாயமான கட்டுப்பாடாக ஆகாது. பிரஜைகளின் சிறந்த உரிமைகளை ஜவுளிக் கமிஷனரின் யதேச்சாதிகார இஷ்டத்திற்கு விட்டுவிடலாமா?"

"சம்பந்தப்பட்ட அதிகாரியின் சொந்த அபிப்ராயமே அளவு கோலாகுமானால் பிறகு அதை ஒரு யதேச்சாதிகாரத்திற்குத் தான் ஒப்பிட வேண்டும்."

"ஜவுளி நூல் ஆகியவற்றைச் சரியாக வினியோகிக்கும் பொருட்டு ஜவுளிக் கமிஷனருக்கு வழிகாட்டுவதற்கான விதிகளோ, கொள்கைகளோ எதுவுமில்லை. அவர் தம்மிஷ்டம் போல் எந்த விதமான உத்திரவையும் பிறப்பிக்கலாம். காரணம் எதுவுமில்லாமல் சில நபர்களை தமது வினியோகத் திட்டத்திலிருந்து நீக்கிவிடலாம். அவர் எவ்வித வித்தியாசமும் பாராட்டலாம்."

"சர்க்காரின் இந்த மனப்பான்மையைக் கண்டு நாங்கள் ஆச்சரியமடைகிறோம். எந்த ஆதாரத்தின் மீது மில்களுக்கு நூல் ஒதுக்கப்படுகிறதென்பதற்கான ஒரு குறிப்புக்கூட பாம்பாய் உதவி பருத்தி டைரக்டரின் மனுவில் காணவில்லை."

மனுதார், சர்க்கார் மீது சாட்டிய குற்றச்சாட்டுகளுக்கு, சர்க்கார் தரப்பில் "மொட்டையாக" மறுக்கப்பட்டிருக்கிறதென்று நீதிபதிகள் அபிப்ராயம் தெரிவித்துள்ளனர். இது போன்று நீதிபதிகளின் மணி வாசகங்கள் தீர்ப்பு முழுதும் ஒலியும் பேரொலியுமாக முழக்கமிடுகிறது.

இந்தத் தீர்ப்பை நாம் முழுமனதுடன் கைகொட்டி வரவேற்கிறோம். மனிதர்களுக்குள்ளே—அவர்கள் நடத்தும் தொழில்களிடையே பேதம் கற்பிப்பது, அறிவீனமென்று கடந்த கண்ட்ரோல் காலத்திலிருந்தே நாம் கூறி வருகிறோம்.

மில் முதலாளிக்கு ஒரு நீதி, கன்சியூமர் கோட்டாதாரர்களுக்கு ஒரு நீதி, ஏழைத் தறிகாரனுக்கு ஒரு நீதி. இப்படியாகப் பேதம் கற்

பிக்கும் ஒரு ஏற்பாட்டிற்குத்தான் எல்லோருக்கும் தொழிலில் சம சந்தர்ப்பம் என்று பெயராம்! வேடிக்கையாக இல்லையா இது?

பணக்காரனுக்கும், பாட்டாளிக்கும் இடையே—வேண்டப்பட்டவன், வேண்டப்படாதவனுக்குமிடையே பேதம் கற்பிக்கும் நூல் வினியோக ஏற்பாட்டிற்குத்தான் "பங்கீடு" என அழகான பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இதை நாம் கோபியில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் கூறிய போது, அக் கூட்டத்திற்குத் தலைமை வகித்திருந்த காங்கிரஸ் எம். எல். ஏ. சுப்பண்ண கவுண்டர் பிரமாதமாக மறுத்தார்.

காங்கிரஸ்காரர் என்பதற்காக தங்கள் சர்க்காரிலே நடைபெறுகிற ஒழுங்கீனங்களைப் பிறர் ஆதாரத்தோடு எடுத்துப் புகார் செய்யும் போது, அதைத் திருத்திக்கொள்ள முயற்சிப்பதாகக்கூட சொல்ல வெட்கப்படும் இவர்கள், இன்று இந்த உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்குப்பின்னால் என்ன செய்யப் போகிறார்கள் என்று கேட்கிறோம்.

நாம் எழுப்பிய இதே ஆட்சேபணையை சட்ட சபைக் கூட்டத்தில் கே. டி. கோசல்ராம் எம். எல். ஏ. என்பவரும் கேள்வி ரூபத்தில் "இந்திய ஜவுளிக் கமிஷனர் மில் முதலாளிகள் பக்கம் சார்ந்தவராக இருக்கிறார். இதனால் இந்த மாகாணத்தில் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இது சர்க்காருக்குத் தெரியுமா?" எனக் கேட்டபோது, மந்திரி பெருமாள்சாமி ரெட்டியார் "நான் அவ்வாறு நினைக்கவில்லை" எனப் பட்டும் படாமலும் பதில் கூறியிருக்கிறார்.

பெருமாள்சாமி ரெட்டியார், ஜவுளிக் கமிஷனரைப் பற்றி—அவர் மில் முதலாளிகளின் கைப்பாவையென நினைக்காமலிருக்கலாம். ஆனால், ஜவுளிக் கமிஷனரின் நடை முறை வேலைகள் நம்மை மட்டுமல்ல, உயர்நீதி மன்றத்தையும் கூட அவர் பாரபட்சமான நடவடிக்கையில் ஈடுபட்டுத்தானிருக்கிறார் என நம்ப—தீர்ப்பளிக்க வைத்திருக்கிறதல்லவா. இதற்கு இப்போது மந்திரியவர்கள் என்ன சொல்லப் போகிறார்?

இந்த ராஜ்ய நூல் வினியோகத்தில் பாரபட்சம் காட்டப்பட்டு கன்ஸியூமர் நூல் கோட்டா என்ற பெயரில் நடந்துள்ள சதியும்—கொள்ளையும் சொல்ல முடியாது. அதே காலத்தில் பல்லாயிரக் கணக்கான ஏழைத்தறிகாரர்களைப் பட்டினிச் சாவுக்கும், பிச்சை வாழ்வுக்கும் இலக்காக்கியும் உள்ளது இந்த ஜவுளிக்கமிஷனரின் யதேச்சாதிகாரமல்லவா?

ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள நாகரீக சர்க்கார் எதுவானாலும் அதனிடம் சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு எண்ணற்ற நெசவாளர்களை—தொழிலுக்கு நூல் கொடுக்காது பட்டினி போட்டுக் கொன்ற குற்றத்திற்காக ஜவுளிக் கமிஷனர் மீது கொலைக் குற்றம் சாட்ட வேண்டுமென்று நெசவாளர்கள் கோரினால் அதில் தப்பு ஒன்றுமில்லையென்றே நாம் கருதுகிறோம்.

இந்த சந்தர்ப்பத்தில் ராஜ்யசர்க்காருக்கும், கட்டுப்பாடு பொருள்கள் டைரக்டருக்கும் ஒன்று கூற ஆசைப்படுகிறோம். கன்ஸியூமர் கோட்டா போன்ற நூல் வினியோகத்தில் உள்ள எல்லா விசேஷ (செல்லப்பிள்ளை) சலுகைகளையும் ரத்து செய்துவிட்டு, கைத்தறிகளுக்கு தொழிலுக்குத் தேவையான நூலை அதன் தேவையான நெம்பர்களில் மாதம் இவ்வளவு எனக் கணக்கிட்டு சமமாகப் பங்கிட்டுக் கொடுக்க முன்வரவேண்டுமென்பதே அது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்காகக் காத்திருந்த டைரக்டர் அவர்கள் நமது கருத்தை ஏற்றுக் கொண்டு இன்றுள்ள அராஜக ஏற்பாட்டிற்கு முடிவுகட்ட முன் வருவார் என நாம் உறுதியாக நம்புகிறோம். ★

நேஷனல் பிரிண்டிங் & டையிங் ஒர்க்ஸ்,

49/15, தாராபுரம் ரோடு, திருப்பூர் S. I. Ry.

நாங்கள் மக்களின் நாகரீக வளர்ச்சிக்கேற்ப, எழில்மிக்க பல வர்ணங்களில் புத்தம் புதிய பம்பாய் டிஸைன்களில் சேலை, சீட்டி ரகங்களும், டிச்சார்ஜ் ரகங்களும் திறமைமிக்க வேலை ஆட்களைக்கொண்டு உத்திரவாதமுள்ள கெட்டிச் சாயங்களில் பிரிண்ட் செய்கிறோம்

ஜவுளி வர்த்தகர்கள் எங்களின் சேவையை உபயோகப்படுத்திக் கொண்டு தங்களின் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டுகிறோம்.

M. K. சின்னப்ப கவுண்டர், உரிமையாளர்

கோவை நெசவாளர்களின் மாபெரும் ஊர்வலம்!

பிரதமரைக்கண்டு குறைகள் தெரிவிக்கப்பட்டன.

கோவை நகரத் தொழிலாள வர்க்கத்தின்சரித்திரத்தில் சமீப ஐந்து வருடங்களில் காணாத— அமைதிமிக்க 4000 பேர் கொண்ட—சுமார் ஒரு மைல் நீள ஊர்வலத்தை கோவை நகர நெசவாளர்கள் கடந்த 26-8-51 தேதி நடத்திக் காண்பித்தார்கள்.

அன்று ராஜ்யப் பிரதமர் குமாரசாமி ராஜா கோவைக்கு வருவதை அறிந்த நெசவாளர்கள், தங்களின் ஜீவாதாரத் தேவையான போதுமான நூல்பெற—அக்கோரிக்கையை வற்புறுத்தி மகஜர் ஒன்று சமர்ப்பித்துவரவே அந்த ஊர்வலத்தை நடத்திச் சென்றார்கள்.

ஊர்வலத்தில், கோவை, ஒண்டிப்புதூர், ஜவஹர்புரம் ஆகிய இடங்களில் வாழும் 100 நெ. நூல்நெசவில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களில் பெரும் பகுதியினர் கலந்து கொண்டனர். குறிப்பாகப் பெண்களும் கலந்து கொண்டனர்.

கடந்த சில மாதங்களாகவே கோவை நெசவாளர்கள் தங்களின் தொழில் தேவைக்கான நூல் கிட்டாது அவதிப்பட்டு வந்தனர். மாதத்தில் குறைந்த பட்சம் 100 நெ. நூல் 5 ராத்தலாவது கிடைத்தால் தான் தறிகள் வேலை செய்யும். ஆனால் தறிகளுக்குக் கிடைத்து வந்தது என்னவோ ஒரே ஒரு ராத்தல் தான்! இதை வைத்துக்கொண்டு மாதமெல்லாம் நெசவாளர்கள் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்?

ஆகவே, அவர்களின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டல்லவா? அதுவரையும் பொறுத்துப் பார்த்தார்கள். நிலைமையில் எவ்வித மாற்றமும் ஏற்பட வழியில்லையெனத் தெரிந்த பின்பே கோவை நெசவாளர்கள் போர்க் கொடியேந்தி, உரிமைக் குரலெழுப்ப முன் வந்தனர்.

"நூல் உற்பத்தி ஸ்தலமான கோவையிலே, நெசவாளர்கள் தொழிலுக்கு நூல் கிடைக்காது கஷ்டப்படுகிறார்களா? அப்படியானால் இங்கு உற்பத்தியாகும் நூல் வேறு எங்குதான் செல்கிறது" என்ற கண்விழிப்பை அவ்வூர்வலம் பொது மக்களிடம் உண்டாக்கியது.

கோவை சர்க்யூட் ஹவுஸில் தங்கியிருந்த பிரதமர் ராஜாவை ஊர்வலத்தின் சார்பாக கோவை கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத் தலைவர் அ.ள.சி. ராமச்சந்திரன் செட்டியார், காரியதரிசி சி. கே. முனிசாமி, கோவை ஜில்லா கைத்தறிபோர்டு அங்கத்தினர் சே.எம்.பொன்னுசாமிஆகியோர் கண்டு குறைகளடங்கிய-கோரிக்கைகள் கொண்ட மகஜரை சமர்ப்பித்து விஷயத்தை விளக்கிப் பேசினர்.

100 நெ. நூல், வெளித் தறிகாரர்களுக்கு மாதம் ஒரு ராத்தலே கிடைக்கும் போது, கன்ஸியூமர் கோட்டாதாரர்களுக்கு மட்டும்தவராது5 ராத்தல்கிடைத்து வருகிறதென்று தூது கோஷ்டியினர் எடுத்துக்காட்டியபோது, பிரதமர் குறுக்கிட்டு "கன்ஸியூமர் கோட்டா என்றால் என்ன" என்று கேட்டாராம்!

இம் மாகாணத்தில் உள்ள—சுமார் 6 கோடிமக்களை ஆளுகிற பிரதமருக்கு இதுகூடத் தெரியவில்லையே; நமது பிரச்னையை இவர் எப்படித் தீர்த்து வைக்கப் போகிறாரோ என நெசவாளர்கள் சந்தேகம் கொள்கிறார்கள்.

இக் கேள்விக்கு, பக்கத்தில் இருந்த ஜில்லா கலெக்டர் "கன்

"கைத்தறி"
ஆண்டு சந்தா ரூ. 3
தனிப் பிரதி அணா நான்கு
மாதிரிப் பிரதி வேண்டுவோர் நான்கு அணா தபால் ஸ்டாம்பு அனுப்பவும்
ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.
"கைத்தறி" காரியாலயம்
முத்தணன்குளம் வீதி, கோவை

திருச்செங்கோடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம்
லிமிடெட் No. S. 523.
(சங்ககிரி R. S.) திருச்செங்கோடு. (சேலம் ஜில்லா)
எங்களிடம் 1,600 தறிகளிலிருந்து நவீன டிசைன்களில் தயாராகும்
கோட்டிங், ஷர்ட்டிங் பீசுகள், சலவை, காடா பீசுகள், துண்டு, வேஷ்டித் தான்கள்
ஆகிய ரகங்கள் சரசமான விலைக்குக் கிடைக்கும்.
தேவையுள்ளோர் விபரங்களுக்கு எழுதவும்.
K. A. காசிவிஸ்வநாத முதலியார்,
தலைவர்.

சியூமர் கோட்டா என்றால் மாஸ்டர் வீவர்கள் கோட்டா" என விளக்கம் தந்தாராம்.

பிரதமர் தூது கோஷ்டியினரின் குறைகளைக் கேட்டு விட்டு தான் சென்னை சென்றதும், 10 நாளில் கட்டுப்பாடுபொருள்களின் டைரக்டரை அனுப்பிக் கொடுப்பதாகவும், அவரிடம் உங்களின் குறைகளைச் சொல்லுங்கள் என்றும், உடனடிப் பரிகாரம் காண தன்னாலானதைச் செய்வதாகவும் வாக்களித்தார்.

தூது கோஷ்டியினர் இவ்வாக்குறுதியை 4000 நெசவாளர்களடங்கியுள்ள கூட்டத்தில் வந்து சொல்லும்படி பிரதமரை கேட்டுக் கொள்ளவே அவரும் சம்மதித்து ஊர்வலமாக வந்திருந்த நெசவாளர்கள் மத்தியில் வந்து 10 நாளில் உடனடிப் பரிகாரம் செய்து தருவதாக வாக்களித்தார்.

ஊர் வலத்தின் முன் வரிசையில் அமர்ந்திருந்த நெசவாளப் பெண்களின் கையிலிருந்த தட்டிகளில் "வாக்குறுதிகளை நிறைவேற்றாத மந்திரிகளே ராஜினாமாச் செய்யுங்கள்" என்று எழுதப்பட்டிருந்தது பிரதமரின் பார்வைக்குப்படும்படி அவர்களால் பிடிக்கப்பட்டிருந்தது. அதைப்பார்த்துப் பிரதமர் ராஜா சிரித்துக் கொண்டார்!

கோவை நெசவாளர்கள் பிரதமரிடம் கொடுத்த மகஜரில் அடங்கியுள்ள கோரிக்கைகளாவன:-

(1) நூல்வினியோகத்தில் நெசவாளர்களின் தேவையையே முதலில் பூர்த்தி செய்ய வேண்டும். (2) ஜில்லாக்களில் உள்ள தறிகளின் கணக்கை அடிப்படையாகக்கொண்டு கோட்டாவை திருத்தியமைக்கவேண்டும். (3) தனிப்பட்ட நெசவாளர்களுக்கும், கன்சியூமர் கோட்டா தாரர்களுக்கும் நூல் கொடுப்பதில் பாரபட்சம் காட்டக்கூடாது. (4) வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நூலைத் தறிகாரர்களின் நூல் பங்கீட்டுக் கார்டுகளுக்கே வினியோகிக்கப்படவேண்டும் (5) கைத்தறி ஜவுளி ஏற்றுமதி வர்த்தகத்திற்கு குறுக்கே நிற்கும் உத்திரவுகள் எல்லாம் ரத்து செய்யப்பட வேண்டும், (6) கைத்தறி ஜவுளிக்கு விற்பனை வரியே கூடாது. (7) கைத்தறி ஜவுளியின் தரத்தை உயர்த்த தர நிர்ணய மசோதாவை உடனடியாகச் சட்டமாக்கப்பட வேண்டும். (8) பாவுப்பசைக்கு பிரத்யேகமாக அரிசி சப்ளை செய்யப்பட வேண்டும். (9) விரைவில் தங்கள் சங்கத்தால் ஆரம்பிக்கப்போகும் நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு பங்கு மூலதனமாக தறி ஒன்றுக்கு ரூ 50 வீதம் சர்க்கார் கடன் கொடுத்து உதவ வேண்டும்.

பிரதமர் ராஜாவிடம் நெசவாளர்களின் தூதுகோஷ்டி தொழில் முன்னேற்றம் குறித்த இன்னும் பல் வேறு கோரிக்கைகளையும் வற்புறுத்தியது.

இராசீபுரம் கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி & விற்பனை
சொஸைட்டி லிமிடெட், நெ. S. 507.

இராசீபுரம் P. O. **சேலம் ஜில்லா.**

சொந்த சாயத் தொழிற்சாலையில் நூல் சாயம் தீர்க்கப்பட்டு 40 நெ. முதல் 100 நெ. வரை நூலில் 6, 7, 8, 9 கெஜம் நீளம் 44", 48" அகலம் அழுத்தமான நெசவு, பேட்டு ரகங்கள், நவீன பார்டர்கள், முந்திகள் உள்ள கலர் சேலைகள் தயார் செய்யப்பட்டிருக்கிறது. **தற்சமயம் விலை குறைக்கப்பட்டிருக்கிறது.**

தேவையுள்ளோர் விபரங்களுக்கு எழுதவும்.

P. C. அப்துல் வஹாப், கோவாபரேடிவ் சப் ரிஜிஸ்திரார், செக்ரடரி.

V. K. ரங்கசாமி, பிரஸிடெண்டு.

சென்னிமலை கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
சென்னிமலை P. O.

எங்களிடம் 20 நெ. முதல் 30 நெ. வரை நூலில் எங்கள் சங்க அங்கத்தினர்களால் தயார் செய்த 5, 6, 7, 7½, 8 கெஜம் 42, 44அங்குல அகலங்களில் கலர் சேலைகளும், வேஷ்டி, துண்டு, காடா பீஸ் ரகங்களும்.

விலை சரசமாய்க் கிடைக்கும்,

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

M. P. நாச்சிமுத்து, B. A., B. L.
தலைவர்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரசபையின் வரிவிதிப்புக்கு நெசவாளர்களின் பலத்த எதிர்ப்பு.

—o—

தேர்தலில் உஷார் : மந்திரிகள் மஹதாப், முன்ஷி போக்குகளுக்கு கண்டனம்!

ஸ்ரீவில்லிப்புத்தூர் கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக 1–9–51-ம் தேதியன்று நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில், ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரசபை தறிகளுக்கு வரி விதிக்க முன் வந்துள்ளதை வன்மையாக ஆட்சேபித்து நித்யானந்தம், சி. சிவப்பிரகாசம், பெ. அய்யாச்சாமி, ப. சிவகாமிநாதன், ஏ. கே. ஞானியார் முதலானோர் பேசினார்கள். பின் கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1) கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டிய நகரசபை, அதற்கு மாறாக அந்தத் தொழிலையே அழித்தொழிக்கும் வகையில் அதன் நடவடிக்கை இருக்கிறது என்பதற்கு அத்தாட்சியாக தறிகளுக்கு வரி விதிக்க முன் வந்துள்ளதை இக்கூட்டம் வன்மையாக ஆட்சேபிக்கிறது.

2) நகரசபை தறிகளுக்கு வரி விதிக்கும் கொள்கையை மாற்றிக் கொள்ளாவிடில், எதிர்த்து நேரடி நடவடிக்கையெடுத்துக்கொள்ள முன்வரும்படி நெசவாளரின் அறப்போர் செயல் கமிட்டியாரை இக்கூட்டம் கோருகிறது,

3) மாதம் தறி ஒன்றுக்கு 10 ராத்தல் (1 கட்டு) நூல் கூட கொடுக்க முடியாத நிலையில் இன்றைய நூல் நிலைமையிருப்பது யாவரும் அறிந்த உண்மை. நிலைமை இப்படி இருக்க சமீபத்தில் சென்னைக்குவந்த மஹதாப் அவர்கள் நூல்நிலைமை திருப்திகரமாக இருக்கிறது எனப் பேசியுள்ளதை இக்கூட்டம் கண்டிப்பதோடு சென்னைக்கு வந்து சென்ற பட்டினி மந்திரி முன்ஷி இங்கு உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறதுஎன இறுமாப்போடு பேசிச் சென்றுள்ளதையும் இக்கூட்டம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

4) சமீபத்தில் தேர்தல் நடைபெற இருப்பதால், அத் தேர்தல் சுதந்திரமாக நடைபெறவேண்டி, தேர்தல் நடைபெற மூன்று மாதங்கள் இருக்கும் போதே மந்திரி சபைகளைக் கலைத்துவிட வேண்டுமென்று இக் கூட்டம் அபிப்ராயப்படுகிறது. தவிர,

நமதுதொகுதியில் 3-ல் 1பங்கு நெசவாளர்கள் இருப்பதால், நெசவாளர் பிரச்னையைத் தீர்ப்பதில் அனுதாபம் உள்ள ஒருவரையே சட்ட சபைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென தாலூக்காவில் உள்ள நெசவாளர் ஸ்தாபனங்களையும், முக்கியஊழியர்களையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

5) நெசவாளர்களுக்குக் கலப்பு உணவு பங்கீடு செய்வதை ரத்து செய்வதுடன், ஷாப் சட்டத்திலிருந்தும் விதிவிலக்களிக்க வேண்டுமாயும் சர்க்காரையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் இக்கூட்டம் கோருகிறது.

(ந-நி)

அவினாசி கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட் No. K. 1229.

அவினாசி P. O.

வரப்போகும் தீபாவளிக்கு உங்களின் ஆடை அலங்காரம் கைத்தறி ஜவுளிகளாகவே இருக்க வேண்டுமல்லவா?

அதற்காக நாங்கள் 20, 26, 40, 60, 80 நெம்பர் நூல்களில் கெட்டிச்சாயப் பேட்டு, சேலைகள், கலர் ஷர்ட்டிங்குகள், வேஷ்டி, துண்டு காடா பீஸ் ரகங்கள் எல்லாம் எங்கள் சொஸைட்டியில் தயார் செய்துள்ளோம்.

உங்களின் ஆசை நிறைவேற ஒருமுறை எங்கள் தயாரிப்பு ஜவுளிகளை வாங்கிப்பாருங்கள்

வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

T. K. ஷண்முக முதலியார், காரியதரிசி.

V. சொக்க முதலியார், தலைவர்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

5) கட்டுப்பாடு பொருள்கள் டைரக்டர், மதுரை சாயச் சாலைக்காரர்களை கெட்டிச் சாயம் துவைக்கும்படி வற்புறுத்த வேண்டும். மட்ட சாயத்தைத் துவைத்து கெட்டிச் சாயக் கூலி பெறும் சாயச் சாலைக் கன்சியூமர்களின் நூல் கோட்டாவை ரத்து செய்துவிட வேண்டும்.

இக்கோரிக்கைகளை நிறைவேற்றினால் நிச்சயம் சாய நூலின் தரம் உயரும். சாய நூல் வியாபாரிகளின் மனக்கசப்பும் தீரும். தறிகாரர்களுக்கும் தங்களுக்கு வேண்டப்பட்ட நெ. நூலும் கிடைக்கும். இதைச் செய்ய வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாம் வற்புறுத்துகிறோம். — எம். கே. எஸ்.

பள்ளிபாளையம் கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் லிமிடெட்,

No. S. 903.

பள்ளிபாளையம் P. O. (Via. ஈரோடு)

புதுமை! ——o—— முற்றிலும் புதுமை!!

பட்டு (Art Silk)ம் நூலும் கலந்து நெய்த சாதா & செளக்ளி ஷர்ட்டிங் ரகங்கள், மேலும் 30, 40, 60 நெ. நூலில் ஷர்ட்டிங்குகளும், சேலைகளும் 20, 30 நெ. நூலில் காடா, வேஷ்டி ரகங்களும் நல்ல முறையில் தயாரிக்கப்படுகின்றன.

தேவைக்கு எழுதுங்கள்.

N. E. மணி, தலைவர்.

மலையாண்டிபட்டணம் நெசவாளர் பொதுக்கூட்டம்.

மலையாண்டிபட்டணம்கைத்தறி நெசவுத்தொழிலாளர் சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று அதன் தலைவர் எம். அப்பாவு தலைமையில் நடைபெற்றது.

அப்போது கோதுமையின் விலையுயர்வைக் குறைக்க வேண்டுமென்றும், நெசவாளர்களுக்கு, நகரப்புறத்தில் கொடுக்கப்படுவது போன்று அரிசியின் பங்கீட்டு அளவை உயர்த்த வேண்டுமென்றும், 8 மாத காலமாக 40 நெ. நூல் மொத்தம் 6½ பவுண்டுதான் கிடைத்திருக்கிறதென்றும், இதைக் கொண்டு நெசவாளி ஜீவிக்க முடியாதென்றும், ஆகவே, மாதம் குறைந்தது 40 நெ. நூல் 10 ராத்தலாவது கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், கோவைஜில்லா தொழிற் சங்க ஊழியரான சி. ஏ. பாலனுக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனையை ரத்து செய்ய சர்க்காரைக் கோரியும், தேனி சம்பவத்துக்குப் பகிரங்க விசாரணைவைக்க வற்புறுத்தியும், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்றும், பிறப்பிக்கப்பட்டுள்ள வாரண்டுகளை ரத்து செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொண்டும் வந்த தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (ஓ. நி)

லட்சுமிநாராயணபுரத்தில் நெசவாளர் கூட்டுறவு சங்க ஆரம்ப விழா!

பொள்ளாச்சித் தாலூக்கா லட்சுமிநாராயணபுரத்தில் ஜூலை மாதம் 20-ம் தேதியன்று சாமி செட்டியார் தலைமையில் கூட்டுறவு நெசவாளர் சங்க ஆரம்ப விழா நடந்தேறியது.

விழாவிற்கு கோவை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் சப் ரிஜிஸ்ட்ராரும், சீனியர் இன்ஸ்பெக்டரும் விஜயம் செய்திருந்தனர். கூட்டுறவு சங்கத்தின் அவசியம் குறித்தும், அதன் மூலம் நெசவாளர்கள் அடைய முடிகிற நன்மைகள் பற்றியும் குள்ளக்காபாளையம் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உபதலைவர் சவுண்டப்ப செட்டியார் விளக்கமாக எடுத்துச் சொன்னார்.

பிறகு நடந்த தேர்தலில், தலைவராக லட்சுமிநாராயணபுரம் கே. ரங்கசாமிசெட்டியாரும், நெகமம் ர. மயில்சாமி செட்டியார் உபதலைவராகவும், ஜக்கார்பாளையம் குமாரசாமி செட்டியார், சந்திராபுரம் வேலுச்சாமி செட்டியார், சேரிபாளையம் வெள்ளியங்கிரி செட்டியார், காட்டம்பட்டி கிருஷ்ணசாமி செட்டியார், தாசநாய்க்கம்பாளையம் நஞ்சப்பசெட்டியர்ர் ஆகியோரை டைரக்டர்களாகவும் கொண்ட நிர்வாக போர்டுஒன்று சொஸைட்டி மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு விழா இனிது முடிந்தது.

கவுந்தப்பாடியில் நெசவாளர் பாதுகாப்புக் கமிட்டி அமைக்கப்பட்டது.

சலங்கபாளையம் ஏ. மாரப்ப முதலியார் தலைமையில் கவுந்தப்பாடி வட்டார நெசவாளர் பொதுக்கூட்டமொன்று 12—8—51 தேதியன்று கவுந்தப்பாடி முசாபரி பங்களாவில் நடைபெற்றது.

நெசவாளர்களின் பரிதாபகரமான நிலைமையைப் போக்க உடனடியாகப் பாதுகாப்புக் கமிட்டி அமைக்கப்பட வேண்டுமென வற்புறுத்தி கே. எம். சென்ராயன், பழனியப்பன், அண்ணாமலை முதலியார், மாரப்ப முதலியார் முதலானோர் பேசினார்கள்.

பின்னர் நெசவாளர் பாதுகாப்புக் கமிட்டி ஒன்று ஏகமனதாகக் கூட்டத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இக்கமிட்டி எவ்வித அரசியல் சார்புடையதாகவும் இல்லாமல், கைத்தறி நெசவாளர்களின் நிலையை உயர்த்தவும், தொழில் அபிவிருத்தியில் அதிகாரிகளுக்கு ஆக்க ஆலோசனைகள் கூறியும் வருமென்றும், எனவே இக்கமிட்டியுடன் பூரணமாக கவுந்தப்பாடி வட்டார நெசவாளர்கள் ஒத்துழைத்துத் தங்கள் குறைகள் தீர ஒற்றுமைப்பட முன்வரவேண்டுமென்றும்கமிட்டியின் காரியதரிசி கே. எம். சென்ராயன் கேட்டுக் கொள்ளுகிறார்.

கோ-ஆப்டெக்ஸ்

உடை தரித்த

குதூகல

குடும்பம்



H.1.

மதராஸ் கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கம் லிமிடெட்

எழும்பூர் :: மதராஸ்

Edited & Published by: M. K. Swamy at 19/22, Muthannankulam Street, Coimbatore